# வைரமுத்து கவிதைகளில் கல்விச் சிந்தனைகள்

**முனைவர் மு.நாகபாண்டி**
இராமநாதபுரம்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**முன்னுரை**

இலக்கியம் என்பது காலத்தைப் பிரதிபலித்துக்காட்டும் கண்ணாடி என்பார்கள். அவ்விலக்கியங்கள் மக்களின் அன்றாட நிகழ்வுகளைப் பதிவு செய்கின்றன. மக்களின் உணர்வுகளுக்கும், காலச் சூழலுக்கும் ஏற்ப பாடுபொருள்கள் மாற்றம் பெறுவது காலத்தின் இயல்பு. “ஒரு நாட்டின் உண்மையான செல்வம் அதன் தங்கம், வெள்ளியில் இல்லை. அதன் கல்விப் பெருக்கத்தில்தான் உள்ளது. அதன் ஞானத்தில்தான் உள்ளது அதன் தலை நிமிர்ந்த மக்களிடம்தான் உள்ளது”. (ப.81, கலீல் ஜிப்ரான், ஞானிகளின் தோட்டம்) அந்தவகையில் நம் முன்னோர் கல்வியில் மேம்பட்டவர்களாகவும், எடுத்துக்காட்டாகவும் விளங்கியவர்கள். அன்றைய காலக்கட்டத்திலேயே பொதுவுடைமை, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கருத்துக்களை விதைத்த. பல்துறை புலமை பெற்ற சான்றோர்கள், மன்னர்களின் அவையில் இருந்தனர். அதன்பின்னர் குருகுலக் கல்வி முறையும் அதனைத் தொடர்ந்து மெக்காலே கல்வித்திட்டமும் வந்தன. இன்றைய நடைமுறையில் இருக்கும் மெக்காலே கல்வித்திட்டம் சிறுசிறு மாற்றம் பெற்று கல்வி – கற்பித்தல் நம் நாட்டில் எவ்வாறு இருந்து வருகிறது? இவை மழலைக் கல்வி முதல் முனைவர் பட்டம் வரை பயனுள்ளதாக இருக்கின்றனவா? வாழ்க்கைக்குப் பயன்படுகிறதா? மாணவர்களின் சுயஅறிவை வெளிக்கொணர்கிறதா? வேலை வாய்ப்பை உருவாக்குகிறதா? ஒட்டுமொத்தமாக தற்போது தமிழ்நாட்டில் உள்ள கல்வி அறியாமை இருளை அகற்றிச் சமுதாயத்திற்கு ஒளி ஏற்றுகிறதா? என்பதை வைரமுத்து கவிதை வழி வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

**மழலைக் கல்வி**

ஐந்து வயதிற்குப் பிறகே அன்று, முதல் வகுப்பில் சேர்க்கும் நிலை இருந்தது. இன்று கணவன் - மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதன் காரணமாகவும், தனிக்குடித்தனம் அதிகரித்ததின் காரணமாகவும் குழந்தைகளைக் கவனிக்கமுடியாமல் இரண்டுவயது நிரம்பும் முன்பே பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும் அவலநிலை உள்ளது. தாயின் பாசமும் அன்பும் அரவணைப்பும் கிடைக்கவேண்டிய பருவத்தில் பள்ளிக்கு அனுப்புவது பிற்காலத்தில் குழந்தைகள் தவறான செயல் செய்வதற்கு வழிவகுக்கும், அவ்வாறு பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளுக்கு இனிமையான கல்வி கொடுப்பதில்லை. இந்நிலை மழலைகளின் மனதில் கற்பதில் கசப்பான அனுபவத்தை ஏற்படுத்துகின்றன.

**“அந்தச் / சிறுபறவைகளின் / இறகுகளை-**
**கொள்ளிக் கட்டைகளாலா / கோதிவிடுவது?**
**எழுத்துக்களின் ஊர்வலத்தில் / அவர்கள்**
**காணாமல் போனார்கள்!**

**(ப.88, வைரமுத்து, இன்னொரு தேசியகீதம்)**

சிறுவர்களுக்கு ஏற்ப விளையாட்டுப் போக்கான கல்வி தேவை. ஆனால் அது இல்லாமல்

**“அவர்கள் மூளையில் / விதையைப்போல்**
**தூவப்பட வேண்டிய அறிவு / ஆணியைப்போல்**
**அறையப்படுகிறது”. (ப.8, வைரமுத்து, இன்னொரு தேசியகீதம்)**

இங்கு மென்மைத்தன்மையோடு அவர்கள் மூளையில் கல்வி சேரவேண்டும். பூமிக்குப் பாரமில்லாமல் தூவ வேண்டும். பிஞ்சு நெஞ்சிற்கு வலிக்காமல் விதைக்கப்படவேண்டும். அறைதல் என்பது வேகம், சிதறல், காயப்படுத்துதல், பிளவு என்ற கிளவியாக்கத்தில் முகிழ்க்கிறது. இது அழுத்தத்தின் அடிப்படை, திணிப்பின் ஆரம்பம். ஆர்வத்தோடு அடுத்த அடுத்தநாள் பள்ளிக்கு வரவழைக்க வேண்டியது கல்வி.

**“பள்ளி செல்லும் சிறுவன்.்.ஒவ்வொரு விடியலிலும்**
**தான் / நாடு கடத்தப்படுவதாய்**
**நசிந்து போகிறான்” (ப.87, வைரமுத்து, இன்னொரு தேசியகீதம்)**

ஒரு மாணவனுடைய நடத்தையில் விரும்பத்தக்க பல மாற்றங்களை ஏற்படுத்துவதுதான் கல்வி ஆனால் இங்கு மாற்றத்தை ஏற்படுத்தாவிட்டாலும் தவறான பாதைக்கு இழுத்துச் செல்லாமல் இருப்பது அவசியம்.

**புத்தகம் - சுமை**

அன்றாடம் தேவையான பாடப்புத்தகங்களை மட்டும் எடுத்துவந்தால் போதுமானது. ஆனால் தேவையில்லாமல் அனைத்து நோட்டுப்புத்தகங்களையும் அனைத்துநாட்களிலும் எடுத்துவர வைப்பது குழந்தைகளின் கல்விமீது நாம் அக்கறைகாட்டவில்லை என்பதையே காட்டுகிறது. பெற்றோர்கள் மத்தியில் தம் பிள்ளை நிறையப் படிக்கிறது என்ற மாயத்தோற்றத்தை ஏற்படுத்தவே பள்ளிக்கூடங்கள் முனைகின்றன. இது தவறான வழிகாட்டுதல் ஆகும்.

**“கல்வி இங்கே / இதயத்தில் சுமக்கும் / இனிமையாய் இல்லாமல் /**
**முதுகில் சுமக்கும் / மூட்டையாகி விட்டது...**
**கொடுமை என்னவென்றால் / குழந்தைகள் /**
**எல்லாம் கூனிகளாயின” (ப.23, மு.மேத்தா, ஒரு வானம் இரு சிறகு)**

இதயம் என்பது மென்மையானது. முதுகு என்பது திண்மையானது. குழந்தைகள் பூப்போன்றவர்கள். சிட்டுக்குருவியின் தலையில் பனங்காய் வைப்பதுபோல வைத்துவிடுகிறோம். ‘ஏறு போல் நட’ என்று நடக்க சொல்லிவிட்டுக் கூனிகளாக மாற்றிவைத்திருக்கிறோம்.

**“பல இளம்பெண்கள் / புத்தகச்சுமை பொறுக்காமலேயே**
**பூப்பெய்தி விட்டார்கள்! (ப.87, வைரமுத்து, இன்னொரு தேசியகீதம்)**

பூப்பெய்துவது என்பது சமைவது, சமைவது என்பது சமைத்தல், பக்குவப்படுதல், தாய்மை அடைவதற்கு தயார் என்ற அறிவிப்பு. இங்கு கவிஞர் பக்குவமாகிவிட்டாள் என்று சொல்லவில்லை. சுமை அதிகமாகும்போது சுமையைத்தாங்கும் அளவிற்கு உடல்வளர்ச்சி அடைகிறது. ஆனால் அறிவு வளரவில்லை என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறார்.

**தேவையற்ற பாடத்திட்டம்**

பாடத்திட்டங்கள் இறந்தகாலத்தையும் நிகழ்காலத்தையும் உள்ளடக்கி எதிர்காலத்திற்கு பயன்தரக்கூடியதாக இருக்கவேண்டும். அவரவர் அறிவை வளர்த்துக்கொள்ளத் தூண்டுதலாக அமைய வேண்டும். இறந்த காலத்தில் உள்ள தேவையற்ற கருத்துக்களை நீக்கித் தேவையானவற்றைமட்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**“இந்தக் கல்விமுறை / புதைத்த பிணங்களைத்**
**தோண்டியெடுத்துத் / துடைத்துக் கொண்டிருக்கிறது!**
**பாடத்திட்டம் படைப்பவர்கள்**
**சுட்டு விரல்களால் தொட்டு நுகர்வது**

**மகரந்தமாம்! / இல்லை...இல்லை...அது**
**போன நூற்றாண்டின் புழுதி." - (ப.89, வைரமுத்து, இன்னொரு தேசியகீதம்)**

பாடத்திட்டம் தயாரிப்பவர்கள் போதுமான காலஅளவு எடுத்துக் கொள்வதில்லை. படித்துப் பார்த்துவிட்டு பாடத்திட்டங்களை உருவாக்குவதும் இல்லை. படிப்பில் மாணவர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் இல்லை.

### மனப்பாடக் கல்வி

கல்வி பயன்தர வேண்டுமெனில் புரிந்து படிக்கவேண்டும். ஒவ்வொரு சொல்லும் பொருள் புரியவேண்டும் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்கிறது தொல்காப்பியம். பொருள்புரியாமல் மனப்பாடம் செய்யும் கல்வி சமூகத்திற்குப் பயன்தரக்கூடிய கல்வி அல்ல.

**"மண்வெட்டி பிடிக்கும் / திராணியைக்கூட**
**மனப்பாடக் கரையான் / தின்று விட்டது." (ப.92, வைரமுத்து, இன்னொரு தேசியகீதம்)**

என்கிறார் வைரமுத்து. அது மட்டுமல்லாமல் மாணவர்கள் ஆசிரியர்கள் இருவரும் கேள்வி கேட்டுப் பதிலளிக்கும் முறை உருவாக வேண்டும். ஒருவழிக் கல்வி எப்போதும் பயன்தராது.

**"கேள்வியில்லாத கல்வி**
**ஒலிப்பதிவில்லாத**
**ஊமைத்திரைப்படம்!" - (ப.25, அப்துல் ரகுமான், நேயர்விருப்பம்)**

### தேர்வுக் கூடம்

தேர்வுக்கூடம் தான் கற்றதை வெளிக்கொணரும் சுயபரிசோதனைச் செய்யுமிடம். ஆனால் இங்கு சொர்க்கத்திற்கே அழைத்துச் செல்வதுபோல் ஆர்ப்பரிக்கும் தேவையற்ற செயல், மாணவர்களைப் பயமுறுத்தும் செயல் ஆகும்.

**"தேர்வுக் கூடமென்னும் / நரகச் சுரங்கந்தான்**
**சொர்க்கத்திற்குச் செல்லும் / சுருக்கு வழியாம்" (ப.90, வைரமுத்து, இன்னொரு தேசியகீதம்)**

### அறிவை வளர்க்கா கல்வி

கல்விஅறிவை வளர்த்து எதிர்காலச் சந்ததிக்கு தூண்டுகோலாக அமையவேண்டும். இன்றைய கல்வி அறிவை மழுங்கச்செய்யும் கல்வி ஆகும்.

**"முதுகுக்குப் பின்னால் / அஸ்தமனம் /**
**முகத்துக்கு முன்னால் இருள் / மூளையின்**
**பயன்படுத்தாத பரப்புகளைக்**
**கத்தரித்து எடுத்துவிட்டது இந்தக்**
**கல்வி!" (ப.92, வைரமுத்து, இன்னொரு தேசியகீதம்) என்கிறார் வைரமுத்து.**

பகுத்து அறியக்கூடிய கல்வி இன்றைய அடிப்படைத் தேவையாக உள்ளது. "பகுத்தறிவும் - கற்றலும் உடலும் - உயிரும்போல. உடலன்றி, உயிர் என்பது, வெறும் காற்று. உயிரின்றி, உடல் என்பது, உணர்வற்ற கூடு. பகுத்தறிவின்றிக் கற்பது, உழப்படாத நிலம் போல. அல்லது, வளர்ச்சியற்ற உடல்போல". (ப.74, கலீல் ஜிப்ரான், ஞானிகளின் தோட்டம்)

### வேலைவாய்ப்பின்மை

நாட்டுமக்களுக்கு மருத்துவமும் கல்வியும் இலவசமாகக் கொடுக்கவேண்டும். ஆனால் அவ்வாறு இல்லாமல் பணத்திற்கேற்ப கல்வியும் பணத்திற்கேற்ப வேலைவாய்ப்பும் உருவாகியிருப்பது கேவலமான செயலாகும். மாணவர்கள் தாம் கற்கும் கல்வி அவர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கவேண்டும். ஆனால் பணம் இல்லாதவர்கள், திறமை உள்ளவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துவிட்டு வேலை வரும் என்று ஏமாந்து போகிறார்கள்.

**"எம்ப்ளாய்மெண்ட் அட்டையில் / புதுப்பிக்கும் தேதி**
**தேடித்தேடியே.்.கண்களின் வெளிச்சம் /**
**கரைந்து விட்டதா...?" - (ப.83, வைரமுத்து, கொடிமரத்தின் வேர்கள்)**

இன்னும் சிலர் வேலைவாய்ப்பின் வயதையும் கடந்துவிட்டனர். ஆனால் வேலை கிடைக்கவில்லை என்கிற மன வேதனையை கவிஞர் சபாபதி “இனி அலைய வேண்டியதில்லை/இன்றோடு முடியும்/ என் வேலைவாய்ப்பு வயது” என்கிறார்.

### எதார்த்தக் கல்வி

எதார்த்தக்கல்வி என்பது இயற்கையின் பாதையில் செல்வது. அனுபவத்தால் தெரிந்து கொள்வது. மனிதனை மனிதனாக்கும் கல்வி. இதுதான் வாழ்க்கைக்குப் பயன்படும் கல்வியாகும்.

**“ஆடம்பர அவசரத்தில் / புல்லாங்குழலைப் பொன்னில்**
**செய்து விடாதீர்கள்!**
**அது மூங்கிலாகவே இருக்கட்டும்!” - (ப.93, வைரமுத்து, இன்னொரு தேசியகீதம்)**

### பழைய கல்வி

சமூக மாற்றத்திற்கு ஏற்ப கடந்த காலக் கல்வி அல்லது கற்பிக்கும் முறை அல்லது கருத்து ஆகியவற்றை மாற்றியமைக்க வேண்டும். புதுமையான செய்திகளையும் பண்பாட்டையும் மொழியையும் ஆர்வத்தோடு பயிலவேண்டும்.

**“பழையவை எல்லாம் பழைமை அல்ல**
**பண்பும் அன்பும் பழையவைதாம்**
**இளையவர் கூட்டம் ஏந்தி நடக்க**
**இனமும் மொழியும் புதியவைதாம்” - (ப.80, வைரமுத்து, ரத்த தானம்)**

### இன்றைய கல்வி

இன்றைய கல்வியின் தேவை அறிவியலையும், கணிப்பொறியையும் ஒருங்கே அமைத்துக் கற்பிக்க வேண்டும். பழைய வரலாற்றையும், கிடைத்தற் அரிய நூல்களையும் புதுப்பிக்க வேண்டும். அழியும், கிழியும் தருவாயில் உள்ள நூல்களை மாணவர்கள் தொகுத்துப் படிக்கவேண்டும்.

**“அறிவியல் என்னும் வாகனம் மீதில்**
**ஆளும் தமிழை நிறுத்துங்கள்**
**கரிகாலன்தன் பெருமை எல்லாம்**
**கணிப்பொறியுள்ளே பொருத்துங்கள்” - (ப.80., வைரமுத்து, ரத்த தானம்)**

### முடிவுரை

கல்வி இன்றைய நடைமுறைகளை உள்ளடக்கியதாகவும், நாளைய தலைமுறைக்குப் பயன்தரக் கூடியவையாகவும் இருக்கவேண்டும். சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நேசிக்கக்கூடியதாகவும் விரும்பக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கவேண்டும். முதியவர்களுக்குப் படிப்பினையையும் சிறியவர்களுக்குத் தூண்டுதலையும் ஏற்படுத்தவேண்டும். பாடத்திட்டங்களைப் படித்துப்பார்த்து வயதிற்கேற்றாற்போல் மாற்றி அமைக்கவேண்டும். வளர்ந்து வரும் அறிவியல் யுகத்தை உள்வாங்கி கண்டுபிடிப்புகளை ஆதரிக்கவேண்டும். இளம் விஞ்ஞானிகளை உருவாக்கும் சுயஅறிவை வெளிக்கொணரும் கல்வி வேண்டும்.

### சான்றுகள்

1. வைரமுத்து - இன்னொரு தேசியகீதம், சூர்யா லிட்ரேச்சர்(பி)லிட், 18வது பதிப்பு, சென்னை, 2007.
2. வைரமுத்து - கொடிமரத்தின் வேர்கள், சூர்யா, 13வது பதிப்பு, சென்னை, 2007.
3. வைரமுத்து - ரத்த தானம், சூர்யா இலக்கியம், 13வது பதிப்பு, சென்னை, 2008.
4. அப்துல் ரகுமான் - நேயர்விருப்பம், நேஷனல் பப்ளிஷர்ஸ், 10வது பதிப்பு, சென்னை, 2004.
5. கலீல் ஜிப்ரான் - ஞானிகளின் தோட்டம், கண்ணதாசன் பதிப்பகம், 3வது பதிப்பு, சென்னை, 1998.
6. மேத்தா.மு - ஒருவானம் இருசிறகு, வர்மா பதிப்பகம், 7வது பதிப்பு, சென்னை, 2000.